1995 நவம்பர் 10]

ஏகமனதான இந்தத் தீர்ப்பை ஏற்று அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் வாய்ப்பு கிடைக்கும்போது பரிசீலிக்கலாம் என்றுதான் இதுவரை சொல்லி வந்திருக்கிறேன். செய்யாறு, திருவண்ணாமலை ஆகிய இடங்களிலே அரசு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. தெள்ளாறு, வந்தவாசி ஆகிய இடங்களில்- சுய நிதிக் கல்லூரிகள் இருக்கின்றன. அரசின் தற்போதைய நிதிநிலையில், புதிய அரசு கல்லூரிகள் தொடங்க இயலாது என்பதைப் பலமுறை இங்கே தெரிவித்து இருக்கிறேன். கல்வி முகமைகள் ஏதும் விண்ணப்பித்தால் சுயநிதிக் கல்லூரிகள் தொடங்குவதற்கு விதிமுறைகளிலே வழி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு முன்பு கேட்டபோதெல்லாம் இதே பதிலைச் சொல்லியிருக்கிறேன். ஆகவே, இது தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேனும் முயற்சி எடுத்தால் அரசு, விதிமுறைகளின்படி அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய ஆலோசனைப்படி நானும் பலமுறை தனியார் கல்லூரிகளை இங்கே அமைக்க முடியுமா என்பதை முயற்சி செய்து பார்த்தேன். நான், என்னுடைய வீட்டில் இருக்கின்ற குழந்தைக்குப் பசிக்கிறது என்று சொன்னால் அமைச்சர் அடுத்த வீட்டில் இருக்கின்ற குழந்தை நன்றாக உண்டுகொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியைப் பற்றித்தான் நான் கவலைப்படுகிறேன். ஆரணி தொகுதியிலேயிருந்து கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கு 3,000க்கு மேற்பட்ட மாணவ மாணவியர்கள் மேற்கொண்டு கல்வி பயில்வதற்காக, கல்லூரிகளுக்குச் செல்வதற்காக அடுத்த ஊர்களுக்குச் செல்கின்ற நிலை அங்கே இருக்கிறது. குறிப்பாக, ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் செல்கிறார்கள். எனவே, இதுவரை அமைச்சர் பரிசீலனை செய்து வருகிறேன் என்றுகூட இங்கே சொல்லவில்லை. ஆகவே எனக்கு அந்த உறுதிமொழியாவது 'வருகின்ற காலத்திலே அரசு செய்யும்' என்ற அந்த உறுதிமொழியாவது தருவாரா? அதையாவது என்னுடைய தொகுதி மக்கள் கேட்டு ஆனந்தம் அடைவார்கள். எனவே, அந்த உறுதிமொழியாவது தருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிக்கு ஒரு அரசு கல்லூரி என்ற திட்டம் அரசிடத்திலே இல்லை. வாய்ப்பு கிடைக்கும்போது இதைப் பற்றிப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

94—

பூம்புகார் தொகுதியில் தொழிற்பயிற்சிப் பள்ளி துவங்குதல்

**47382—திரு. எம். பூராசாமி:*

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் ஒரு தொழில் பயிற்சிப் பள்ளி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழ இடமில்லை.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி மிகவும் ஏழை எளிய மக்களைக் கொண்டுள்ள தொகுதி. அங்கே மாணவ மாணவியர் தொழிற் பயிற்சிப் பள்ளி ஆரம்பித்தால் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரும். ஆகவே, எதையும் செய்யும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு இந்த ஆண்டில் அந்தத் தொழிற் பயிற்சிப் பள்ளியை ஆரம்பிப்பார்களா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் அமைந்துள்ளது. நாகப்பட்டினத்தில் ஒரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. தமிழகத்தின்